Indwl. com

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை–28

மே.எ.எண்.44928/கே2/2021, நாள்.28.08.2023.

அரசாணை (3டி) எண்.17. வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த்துறை, நாள்.03.08.2023 சார்பு செய்யப்படுகிறது.

திருமதி.அ.ஆனந்தி இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள காரைக்குடி மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றினை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப காரைக்குடி மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

/ஆணையின்படி/

கண்காணிப்பாளர்

பெறுநர்
திருமதி.அ.ஆனந்தி, இளநிலை உதவியாளர்
(காரைக்குடி மாவட்டப்பதிவாளர் மூலம்)

நகல்

1. மாவட்டப்பதிவாளர், காரைக்குடி
   (கீழ்கண்ட அசல் சான்றுகளுடன்)
   (i) S.S.L.C. மதிப்பெண் சான்று
       ப.எண்.155599/ஏப்ரல் 2004
   (ii) H.S.C. மதிப்பெண் சான்று
       ப.எண்.207813/மார்ச் 2006
   (iii) Provisional Certificate
       Folio No. TVLP63006
   (iv) சாதிச்சான்று
2. கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
3. முக்கிய ஆணை கோப்பு / தனி நகல் – 1.

கலைஞர் 100
1924 - 2023

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – காரைக்குடி பதிவு மாவட்டம் – திருமதி.அ.ஆனந்தி என்பவர் கருணை அடிப்படையில் 12.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை**

**அரசாணை (3டி) எண்.17** **நாள் :03. 08 . 2023**

**சோபகிருது, ஆடி -18,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2054.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் ஆணை எண்.44928/கே2/2021, நாள் 22.04.2022.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.44928/கே2/2021, நாள் 11.05.2023.

------------

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் கடிதத்தில், பதிவுத்துறையில், விருதுநகர் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் பயிற்சி சார்பதிவாளராக பணிபுரிந்தபோது, பணிக்காலத்தின் இடையே 26.04.2021 அன்று இறப்புற்ற திரு.J.அருண்குமார் என்பவரின் மனைவி திருமதி.அ.ஆனந்தி என்பவர் தமக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 12.11.2021-ல் விண்ணப்பித்துள்ளார் என்றும், நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினை பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர், திருமதி.அ.ஆனந்தி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திருமதி.அ.ஆனந்தி, 12.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து

பணிபுரிந்து வருகிறார். திருமதி.அ.ஆனந்தி, இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், பதிவுத்துறை தலைவரின் கருத்துரு மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு பதிவுத்துறை தலைவரின் பரிந்துரையை ஏற்று, விருதுநகர் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் பயிற்சி சார்பதிவாளராக பணிபுரிந்தபோது இறப்புற்ற திரு.J.அருண்குமார் என்பவரின் மனைவி திருமதி.அ.ஆனந்தி என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில் காரைக்குடி பதிவு மாவட்டத்தில் கருணை அடிப்படையில் அவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 12.05.2022 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.4754/ட்டி.1/2023, நாள் 04.07.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.5120209/ஜி1/2023, நாள் 26.07.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

**பெறுநர்:**

பதிவுத்துறை தலைவர், சென்னை-28. (இணைப்புடன்)

திருமதி.அ.ஆனந்தி, இளநிலை உதவியாளர்,
காரைக்குடி பதிவு மாவட்டம்,
(பதிவுத்துறை தலைவர், சென்னை-28 மூலமாக)

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை,
சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/8/2023.

பிரிவு அலுவலர்